இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 223 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 10 – திங்கள்கிழமை 24 மார்ச் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 223 : Thiruvalluvar Year - 2056 - Panguni 10 - Monday 24 March 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த கட்சி பிரதிநிதிகளின் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கினார். இக்கூட்டத்தில், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார், கேரள மாநில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் கும்பக்குடி சுதாகரன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சலாம், கேரளா காங்கிரஸ் கட்சியின் பிரான்சிஸ் ஜார்ஜ், கேரளா காங்கிரஸ் (மணி) கட்சியின் ஜோஸ் கே.மணி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் பிரேம சந்திரன், தெலங்கானா மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகேஷ் கவுட், பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.டி.ராமாராவ் மற்றும் வினோத் குமார், அகில இந்திய மஜ்லிஸ்இஇத்தேஹாதுல் முஸ்லிமீன் கட்சியின் இம்தியாஸ் ஜலில், பஞ்சாப் மாநில சிரோன்மணி அகாலி தள கட்சியின் சர்தார் பல்வீந்தர் சிங் மற்றும் தல்ஜித் சிங் சீமா, பிஜு ஜனதா தள கட்சியின் அமர் பட்நாயக் மற்றும் சஞ்சய் குமார் தாஸ் பர்மா, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து, இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க, கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்த, உரிமைகளை மீட்டெடுக்க

நாம் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றிணைந்து போராடுவோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – கருத்தியல் ரீதியான அழைப்பு !

சென்னை, மார்ச் 24 -

“மாநில உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய பா.ஜ.க.விடமிருந்து, இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்க, கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்த, உரிமைகளை மீட்டெடுக்க நாம் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றிணைந்து போராடுவோம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போது கருத்தியல் ரீதியான அழைப்பினை விடுத்தார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (22.3.2025) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த கட்சி பிரதிநிதிகள் அடங்கிய முதல் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை வருமாறு:-

இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மாநிலத்தில் இருக்கும் - ஆட்சி செய்யும் ஒரு கட்சியின் அழைப்பினை ஏற்று இத்தனை இயக்கங்கள் - கட்சிகள் வந்திருப்பது இக்கூட்டத்தின் மாபெரும் சிறப்பு!

எங்கள் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் முதலில் வருக வருக என வரவேற்கிறேன்!

இந்திய ஜனநாயகத்தைக் காக்க ஓரணியில் திரண்டிருக்கிறோம்!

பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் - துணை முதலமைச்சர்கள் - தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளின் தலைவர்கள் - பிரதிநிதிகள் - அமைச்சர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்துள்ளீர்கள். இந்திய ஜனநாயகத்தைக் காக்க நாம் அனைவரும் ஓரணியில் திரண்டிருக்கிறோம் என்பதை இந்தியாவுக்கு உணர்த்துவதாக உங்களது வருகை அமைந்திருக்கிறது.

இந்திய ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி ஆகியவற்றைக் காக்க நாம் ஒன்று கூடி இருக்கிறோம். இந்த முன்னெடுப்பில் இணைந்துள்ள அத்தனை பேருக்கும் நன்றி!

பல்வேறு மாநிலங்களில் இருந்து நாம் ஒன்றுகூடி இருக்கிறோம். நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலமும், ஒவ்வொரு வகையில் தனித்தன்மை கொண்டது! பல்வேறு மொழிகள் - இனங்கள் - வழிபாட்டு நம்பிக்கைகள் - பண்பாடுகள் - உடைகள் - உணவுகள் - பழக்க வழக்கங்கள் கொண்டதுதான், இந்தியா! இத்தகைய மாநிலங்கள் சுயாட்சித் தன்மையுடன் செயல்பட்டால் தான் - இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி உருவாக முடியும்! சிறந்த வளர்ச்சியை அடைய முடியும்! அனைத்துத் தரப்பு மக்களும் போராடியதால்தான், நமது நாட்டிற்கு விடுதலை கிடைத்தது! இதனை உணர்ந்துதான், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்த மேதைகள், இந்தியாவைக் கூட்டாட்சி கொண்ட ஒன்றியமாக கட்டமைத்தார்கள்.

பல்வேறு காலக்கட்டங்களில் இந்தக் கூட்டாட்சித் தன்மைக்கு சோதனை வந்தாலும் - அதனை ஜனநாயக அமைப்புகள் - இயக்கங்கள் தடுத்து வந்துள்ளன. அத்தகைய சோதனையும் ஆபத்தும்தான் இப்போதும் வந்துள்ளது. இதனை உணர்ந்துதான் நாம் அனைவரும் கூடியிருக்கிறோம்.

நாம் கடுமையாக எதிர்க்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்!

என்னைப் பொறுத்தவரையில், இந்தியக் கூட்டாட்சியைக் காக்கும் வரலாற்றில் மிகமிக முக்கியமான நாளாக இந்த நாள் அமையப் போகிறது. தொகுதி மறுசீரமைப்பைப் பற்றி நான் உங்களுக்கு அதிகமாக விளக்க வேண்டிய அவசியமில்லை. வர விருக்கின்ற - அல்லது எதிர்காலத்தில் நடைபெறுகின்ற சென்சஸ் அடிப்படையில் மேற்கொள்ளவிருக்கும், மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு என்பது, நம்மைப் போன்ற மாநிலங்களை வெகுவாக பாதிக்கப் போகிறது. மக்கள் தொகையை பல்வேறு சமூகநலத் திட்டங்கள் மூலமாகக் கட்டுப்படுத்திய நம்மைப் போன்ற மாநிலங்கள், அதன் காரணமாக நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையில் நமது பிரதிநிதித்துவத்தை அதிகம் இழக்க நேரிடும். எனவேதான் இதனை நாம் கடுமையாக - ஆணித்தரமாக எதிர்க்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

“தற்போதைய மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது” என்பதில் நாம் அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களைத் தண்டிப்பதா?

இங்கே இருக்கும் ஒவ்வொரு மாநிலமும், மக்கள்தொகை கட்டுப்பாட்டின் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. இத்தகைய மாநிலங்களைத் தண்டிப்பதாக இந்த நடவடிக்கை இருக்கப் போகிறது. மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைவதன் மூலமாக நமது எண்ணங்களைச் சொல்வதற்கான வலிமை குறைகிறது.

இரண்டு ஆண்டு காலமாக மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது. ஆனால் நீதிக்கான அவர்களின் குரல்கள் புறக்கணிக்கப் படுகின்றன. ஏனென்றால் நாட்டின் கவனத்தை ஈர்க்க அவர்களுக்கு அரசியல் வலிமை இல்லை. எனவே, நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைவது அல்லது நமது பிரதிநிதித்துவம் குறைவது என்பதை நம்முடைய அரசியல் வலிமையை குறைப்பதாகத்தான் பார்க்க வேண்டும்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.3.2025), நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார், பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.டி.ராமாராவ் ஆகியோரை பொன்னாடை அணிவித்து வரவேற்று, கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.